# வட்ட தீபம்

சஞ்சிகை வெளியீடு

உயர்தர மாணவ மன்றம் - 2016











## கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீபம்

**போசகர்**

திரு.கிருஸ்ரிலெனாட் மனுவல்

**இதழாசிரியர்/பொறுப்பாசிரியர்**

சைவப்புலவர் ஜனகா சிவசுப்பிரமணியம்

**தலைவர்**

செல்வி.ப.விதுர்சிகா

**வெளியீடு**

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

(உயர்தர தமிழ் மன்றம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டதீபம்

வட்டதீபம் சஞ்சிகை
உயர்தர மன்றம் -2016

**வெளியீடு**
கிளி/வட்டக்கச்சி
மத்திய கல்லூரி

**போசகர்**

திரு.கிருஸ்ரிலெனாட் மனுவல்

**இதழாசிரியர்**

சைவப்புலவர்

ஜனகா சிவசுப்பிரமணியம்

உள்ளே...?


அம்மா
விஞ்ஞானத்தின் விந்தை
உங்களுக்கு தெரியுமா
அறிந்தும் அறியாததும்
க.பொ.த உ/தர.....
தனியாள்..
உங்களுக்கு..
பாட்டுக்கொரு புலவன்
இலங்கையின்...
இவர்தான் பில்கேட்ஸ்...
புத்தகங்களில்..
கல்வி
மேலும் பல............




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

## பாடசாலையின் நோக்கக்கூற்று –

தரமான கல்வியின் மூலம் தனியாள், குழு, கிராம சமூகத்தவர்களிடையே ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்தல்

## பாடசாலையின் பணிக்கூற்று–

கல்விக் கொள்கைகளின் படி கலைத்திட்டத்தையும், மாணவ சமநிலைப் பண்புகளையும் விருத்தி செய்வதற்கு ஆசிரிய ஆளணி, பணியாளர், பௌதீக வளம்,நிதிமுகாமை, உறவு வலுப்படுத்தல் என்பவற்றின் மூலம் இலக்கை நோக்கி நெறிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

**"நீரளவே யாகுமாம் நீராம்பல் –தான் கற்ற**

**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு"**

எனும் ஔவையின் ஆழமான கருத்தினை சிரமேற்கொண்டு அறிவினை விருத்தி செய்யவேண்டும் என்ற தேவை இன்றைய சமூகத்திற்கு உண்டு. உலகில் மாற்றம் என்பது நிரந்தரமானது. மாற்றம் இல்லாத வாழ்க்கை ஏற்றம் இல்லாத வாழ்க்கை. என்பதை மனதில் இருத்தி வளமான,மனிதாபிமானம் மிக்க வாழ்க்கை வாழ்வதற்கு அறிவு அவசியமாகின்றது. இவ் அறிவையும் மனிதாபிமானத்தையும் வளர்க்க பாடசாலைகள் பெரிதும் உதவுகின்றது.

இந்த வகையில் வட்டக்கச்சி பெருநிலப்பரப்பின் தலைசிறந்த எமது கல்லூரியின் உயர்தர தமிழ் மன்றத்தின் வட்டதீபம் எனும் சஞ்சிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரி மத்திய கல்லூரியாகதரம் உயர்ந்த பின்னர் வெளிவரும் முதலாவது சஞ்சிகை இதுவாகும். இவ் உயர்தர தமிழ் மன்றத்தினரால் இச் சஞ்சிகை ஆக்கத்தை முன்னெடுத்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இம்முயற்சி பலநூறு ஆண்டு காலம் தொடர மனமார வாழ்த்துகின்றேன்.

**நன்றி**

*திரு.கிருஸ்ரிலெனாட் மனுவல்*

*அதிபர்*

*கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஅதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலை உயர்தர தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படும் வட்டதீபம் என்னும் சஞ்சிகையானது மிகநீண்ட காலத்திற்குப் பின்னர் வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன் இச் செயற்பாட்டை முன்னெடுத்த ஆசிரியர் மாணவர்களையும் பாராட்டுவதோடு இப்பணி தொடர்ந்து சிறக்க வாழ்த்துகின்றேன்.

*திரு.ஜெ.கிருபாலன்*

*பிரதிஅதிபர்*

*கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபஅதிபரின் வாழ்த்துச் செய்தி

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு

கற்றனைத்தூறும் அறிவு"

நவீன உலகின் சவால்களை வெற்றி கொள்வதற்கு கல்வித் துறையானது பல மாற்றங்களை கண்டுவருகிறது. மாணவர்கள் பல்துறை ஆற்றல்களை வெளிப்படுத்தி தேர்ச்சியுடையவர்களாக ஆக்குவதற்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மன்றங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் உயர்தர தமிழ் மன்றத்தினால் "வட்டதீபம்" எனும் சஞ்சிகை வெளிவருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்விப்புலத்தில் தனது அடையாளத்தை நிறுவும் வகையில் தொடர்ந்தும் பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவேண்டும் என எனது நல்லாசிகளை உவந்தளித்து உளமார எமது கல்லூரி மாணவர்களைப் பாராட்டுகின்றேன்.

*திருமதி. கா.காசிலிங்கம்*

*உப அதிபர்*

**"சபலம் பிறக்கும் போது எவனுக்கு வைராக்கியம் உருவாகிறதோ**

**அவன் தான் ஞானி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதித் தலைவர் வாழ்த்துச் செய்தி

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் "வட்டதீபம்" மலர்வதையிட்டு மகிழ்வடைகின்றேன். 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்கான ஆளுமைப் பண்புகளை விருத்திசெய்து கொள்வதற்கும், தொழில் உலகிற்கு தேவையான படைப்பாற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் இந்த சஞ்சிகையானது தளம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த ஆக்க முயற்சியில் ஈடுபட்டுள்ள உயர்தர தமிழ் மன்ற மாணவர்களைப் பாராட்டுகின்றேன். இம்முயற்சியானது வருடாவருடம் தொடர வாழ்த்துகின்றேன்.

*திரு.சி. சிறீதரன்*

*பகுதித் தலைவர் (உயர்தரம்)*

**"எந்தச் சந்தர்ப்பத்திலும் உத்தமனாய் இரு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதித் தலைவர் வாழ்த்துச் செய்தி

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி உயர்தர தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படும் வட்டதீபம் மீண்டும் புதுப்பொலிவுடன் ஒளிபரப்புவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரி மாணவர்களின் உள்ளக்கிடக்கைகள் மற்றும் தாம் கற்றறிந்தவையும், நினைவில் பொதிந்தவையுமான பல கட்டுரைகளும் கவிதைவடிவிலான பலவிடயங்களும் உண்மையில் காத்திரமானவையாகும். என்பதை இம்மலரை நுகர்ந்து பார்ப்பவர்களுக்கு நன்கு புரியும். இவ்வட்டதீபம் தொடர்ந்து பல ஆண்டுகாலம் சிறந்து வெளிவரவேண்டுமென வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் உளமகிழ்ச்சி அடைகின்றேன்.

*திரு.ம .ஜெகதீஸ்வரன்*

*பகுதித் தலைவர்*

*கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி*

**"பேராசை இல்லாவிட்டால் ஆயுதங்களுக்கு அவசியமே இருக்காது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்ற ஆசிரியரின் மனதில் இருந்து

**தேன் மதுரைத் தமிழோசை உலகெல்லாம்**

**பரவும் வகை செய்தல் வேண்டும்..**

பண்பாடும் கல்வியும் வீரமும் ஒருங்கே விளைந்த வன்னிநிலப்பரப்பின் குறிஞ்சித் தென்றல் தவழ்ந்து மருதத்தின் செந்நெல் பரந்து வான்பரந்த தென்னைகளும் தேன்சிந்தும் மாங்கனிகளும் உடைய வட்டக்கச்சியின் உயர்கல்வி நிலையமாம் வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் உயர்தர தமிழ்மன்ற மாணவர்கள் (தரம் 10,11,12,13) இணைந்து "வட்டதீபம்" என்னும் சஞ்சிகையை வெளியிடுவது அளப்பெரிய முயற்சியாகும். இம்முயற்சி நன்னோக்கும் நற்புலைமையும் மிக்கது. இம்முயற்சி என்ஞான்றும் நிலைத்து நின்று தொடர வாழ்த்துகின்றேன்.

*ஜனகா. சிவசுப்பிரமணியம்*

*மன்றப்பொறுப்பாசிரியர்*

*உயர்தர தமிழ் மன்றம்*

**"படிக்கத் தெரியாத அக்பர் 13 ஆவது வயதில் ஆட்சிக்கு வந்து நல்லாட்சி புரிந்தார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

பத்து மாதம்
பத்திரமாய் என்னைச் சுமந்து
பாதுகாத்த என் அம்மாவே
பாரினிலே எனை பெற்றெடுத்தவள் நீயே
பாலுடன் பாசத்தையும் ஊட்டினாயே
பகலும் இரவும் பாராது கண்மணி போல் காத்தாயே
பள்ளி சென்று திரும்பும்வரை
பாதி வழி காத்திருப்பவள்
பண்பையும், பணிவையும், பலத்தையும்- பயிற்றுவித்தாளே
பட்டங்கள் பல பெற்று பாரினில்
நான் சிறந்திட பாத்திருப்பவள் - நீயே
பார்உள்ள வரையும் பாத்திருப்போம் உம்மையே..

பா.சுபத்திரா

தரம் 11/A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் விந்தை

ஆதியில் மனிதன்
ஆடையின்றி இருந்தான்
இலையால் தைத்தான் ,
உலகிற்கு ஆடை
கண்மூடித்திறக்கும் வேளையில்
கண்டுபிடித்தான்.
ஆதியில் புறாவில் தூதுவிட்ட மனிதன்
இக்கணம் தூதுவிடுகிறான் தொலைபேசியில்
நிலக்கரியில் ஓடிய புகைவண்டி
தற்போது ஓடுகின்றது மின்சாரத்தில்
வெளிச்சமின்றி இருந்த உலகில்
இன்று எரிகின்றன பல மின்குமிழ்கள்
தேவைகள் வளரவே வளர்ந்தது- நம் தேடலும்
தேவைகள் அழியவில்லை
எனவே தேடல்களும் நிற்கவில்லை
தேடல்களே விஞ்ஞானத்தை வளர்த்தது
விஞ்ஞானம் தேடல்களை வளர்த்தது.-
இதுவேவிஞ்ஞானத்தின் விந்தை.

அ.ஜெனுசானி
தரம் 11/A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா.....?

- உன்னை நீ அறிவாய் என்று போதித்த சிந்தனையாளர் சாக்கிரட்டீசுக்கு கிடைத்த பரிசு கொடிய விசமாகும்.
- 2 லட்சம் பேர் உட்காரக்கூடிய விளையாட்டு அரங்குகள் 2000ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளன.
- நாட்டின் சுதந்திரத்துக்காக போர்புரிந்த வீராங்கனை ஜோன் ஆப்ஆர்க் தீயில் உயிரோடு எரிக்கப்பட்டாள்
- இங்கிலாந்தை ஆண்ட மகாராணி முதலாம் எலிசபெத் வாழ்நாள் முழுதும் கன்னியாகவே வாழ்ந்தாள்
- ரோம் மன்னர் நீரோ ரோம் நகரம் பற்றி எரிந்தபோது உல்லாசக்கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.
- அமெரிக்காவை சுதந்திர நாடாக்கி அதன் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக இருந்தவர் ஜார்ஜ் வாசிங்டன்

- அமெரிக்கஜனாதிபதியாக இருந்த ஆபிரிக்காம்லிங்கன் நாடகம் பார்த்துக்கொண்டு இருக்கும் போது நிறவெறிபிடித்த ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

- கடலில் உலகம் சுற்றிய ஜேம்ஸ்கிக் ஆதிவாசிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

- கொடியவர் என்று பெயரெடுத்தாலும் தூய வாழ்க்கை வாழ்ந்தவர் அவுரங்கசீப்.

- மேடைப்பேச்சுக்கு இலக்கணம் வகுத்தவர் பேரறிஞர் அண்ணா ஆவார்

செல் .லக்சனா

கலைப்பிரிவு 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்ததும் அறியாததும்

- மகாபாரதத்தின் உண்மையான பெயர் -ஜெயசம்கிதா
- திருத்தொண்டர் புராணம் என்ற அடைமொழியை உடையநூல் -பெரியபுராணம்
- தமிழ்மறை என்ற அடைமொழியை உடையநூல் -திருக்குறள்
- மதம் அறிவைக் கெடுக்கும் என்றவர் -தந்தை பெரியார்
- இந்தியாவின் நாவல் அக்கடமி அமைந்துள்ள இடம் -கொச்சி
- தமிழ் நாட்டிலுள்ள அரசு நூலகங்கள் எத்தனை -2400
- வ.வே.சு நடத்திய பத்திரிகையின் பெயர் -விவேகபானு
- விஸ்வாமித்திரர் இயற்றிய இராமாயணத்தின் பெயர் -அத்யாத்ம இராமாயணம்
- வான்மீகி எந்தப் பறவையைப் பார்த்து இராமாயணம் எழுதினார் -அன்றில்

**இ.தமிழினி**

**தரம் -10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உ/தர மாணவர்களின் தனியாள் செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பாக்கப்படும் நோக்கங்கள்

- ❋ பிரயோக நிபுணத்துவத்தை விருத்தி செய்து கொள்ளல்
- ❋ பிரச்சினை ஒன்றிற்கு சவாலாக முகங்கொடுக்கப் பழகுதல்
- ❋ குழுவாக ஒன்று சேர்ந்து தொழிற்படல்
- ❋ தமது ஆற்றல்களுக்கு தாமே காரணம் கூற வழிகாட்டுதல்
- ❋ உழைப்பு திருப்தியினை ஏற்படுத்தி வேலை உலகினை அறிந்து கொள்ளல்
- ❋ சூழல் வளங்களை அறிதலும் பாதுகாத்தலும்
- ❋ தொடர்பாடல் திறனை விருத்தி செய்து கொள்ளல்
- ❋ ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடல்
- ❋ ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக செலவிடுதல்
- ❋ அழகை ரசித்தலும் மதித்தலும்
- ❋ நேரமுகாமைதுவமும் திட்டமிட்டு செயற்படுதலும்
- ❋ சமூக பிரச்சினைகளை அறிதலும் அவற்றிற்கு தீர்வைத் தேட முயற்ச்சித்தலும்
- ❋ சமூக நலன்களை சரியான வழிக்கு திருப்புதல்
- ❋ செயற்பாடுகளினூடாக சுய ஒழுக்கத்தினை விருத்தி செய்தல்
- ❋ தேசிய அபிவிருத்தியில் பங்கு பற்றும் மனப் பான்மையை விருத்தி செய்தல்

எஸ் .லக்சனா /கலைப்பிரிவு 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாள் செயற்றிட்டத்தில் இருக்கவேண்டிய விடயங்கள்.....

1. முன் பக்கம்
2. சுருக்கம்
3. அறிமுகம்
4. நோக்கம்
5. பயன் அடைவோர் பற்றிய விளக்கம்
6. செயற்றிட்டத்திற்கு பயன்படுத்திய வளங்கள்
7. பயன்படுத்திய முறை
8. செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்திய விதம்
9. காலம்
10. தரவுகளை முன்வைத்தலும் தரப் பகுப்பாய்வும்
11. முடிவுகளும் ஆலோசனைகளும்
12. சுய கணிப்பீடும் கலந்துரையாடலும்
13. உசாத்துணை நூல்கள்
14. இணைப்புக்கள்.

சி. லக்சனா

கலைப்பிரிவு 2018

**"சுயதேடல் மனிதனது வாழ்வை நிர்ணயிக்கும் ஒரு பொருள் ஆகும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு மன அமைதி வேண்டுமா..........?

நல்லாரோக்கியமும் பொருளாதாரப் பாதுகாப்பும் மன அமைதிக்கு மிகவும் இனிறியமையாதவை என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் இவை இரண்டும் இருப்பினும் பலரும் தொடர்ந்து மன அமைதியின்றி அல்லல்படுகின்றனர். நீங்கள் இந்த வகையைச்சோர்ந்தவர்களா? அப்படியாயின் மேலும் இதைப் படியுங்கள். உங்களது தொல்லைகள் பெரும்பாலும் நீங்களாகவே உண்டாக்கிக் கொண்டது. என்பதால் அவை தவிர்க்கப்படக் கூடியவையே.

நீங்கள் அடிக்கடி பிறர் விடயங்களில் தலையிடுகிறீர்களா? அவர்கள் தவறானவர்களாகவே இருக்கலாம். ஆனால் அதை முன்னிட்டு நீங்கள் அல்லலுறுவானேன். யாரையும் எதையும் குறை கூறாதீர்கள். பிறருக்கு தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை கடவுள் உங்களுக்கு கொடுக்கவில்லை. எல்லோரும் அவரவர் விருப்பப்படியே நடக்கின்றனர்.உங்கள் அமைதியை பாதுகாக்க நீங்கள் உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்பது ஒரு நல்ல விதியாகும்.

உங்கள் வேலையில் . நீங்கள் கவனம் செலுத்துங்கள். மன அமைதிக்கு முக்கியத்துவம் தருவோர் எல்லாவற்றிற்கும் மேலாக கடைப் பிடிக்க வேண்டிய நியதி இதுவாகும். இந்த உலகில் எதுவுமே உங்கள் கவனத்தை வேண்டுவதில்லை. அனைத்தையும் கவனிக்க ஒரு ஆண்டவன் இருக்கிறார். இந்த உண்மையை மறக்கக்டாது.

குறைகூறுதல் என்பது திட்டுதலுக்கு நிகரானது. எதுநடந்தாலும் அது கடவுளின் இச்சையால் நடக்கிறது. கடவுளின் அனுக்கிரகம் இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமே நிகழ்வதில்லை. ஏதாவது நிகழ்ந்தது என்றால் அது உங்கள் பார்வையில் நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். அதற்கு

கடவுளின் அனுமதி இருக்கிறது என்று தான் பொருள். நீங்கள் அதை கண்டனம் செய்தால் கடவுளின் விருப்பை, கடவுளின் பேரறிவை , கடவுளின் தீர்ப்பை நீங்கள் விமர்சிக்கிறீர்கள் என்று தானே அர்த்தம். ஆதை கூட செய்யாதீர்கள் உங்களுக்கு மன அமைதி கிட்டும்.

உ.துவாரகாமேரி

வர்த்தகப் பிரிவு/2018

**"எங்கு அமைதி இருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுக்கு ஒரு புலவன்

பெயர் - சுப்பையா.சுப்புரத்தினம்

பிறப்பு – 1882.12.11(எட்டயபுரம்,தூத்துக்குடி மாவட்டம்)

இறப்பு – 1921.10.11

இருப்பிடம் - திருவல்லிக்கேணி

தேசியம் - இந்தியர்

வேறுபெயர்கள் - பாரதியார், சுப்புரத்தினம், முண்டாசுக்கவிஞன், மகாகவி, சக்திதாசன்

பணி – செய்தியாள்,கவிஞன், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், விடுதலைவீரர், சமூகசீர்திருத்தவாதி.

அரசியல் இயக்கம் - இந்திய விடுதலை இயக்கம்

பெற்றோர்கள் - சின்னச்சாமிஐயர் (தந்தை)

இலக்குமி அம்மாள் (தாய்)

வாழ்க்கைத்துணை – செல்லம்மாள்

பிள்ளைகள் - தங்கம்மாள்(பிறப்பு-1904)

சகுந்தலா (பிறப்பு-1908)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவரின் படைப்புக்கள் சில**

1. குயில்பாட்டு
2. கண்ணன்பாட்டு
3. சுயசரிதை(பாரதியார்)
4. தேசியகீதங்கள்
5. புரதி அறுபத்தாறு
6. ஞானப் பாடல்கள்
7. விநாயகர் நான்மணி மாலை
8. பாரதியார் பகவத் கீதை
9. தோத்திரப் பாடல்கள்
10. விடுதலைப் பாடல்கள்
11. பாஞ்சாலி சபதம்
12. ஞான ரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பதஞ்சலியோக சூத்திரம்

14. நவ தந்திரக் கதைகள்

15. சுதந்திர சங்கு

16. இந்து தர்மம்

17. சின்னஞ் சிறு கிளியே

18. சந்திரிகையின் கதை

19. பொன்வால் நரி

20. ஆறில் ஒரு பங்கு

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்" – பாரதி"

கு.யதுசா

வர்த்தகப் பிரிவு(2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தற்போதைய கல்வியும் நூலகங்களின் தேவையும்

இலங்கையின் தற்போதைய கல்வி முறையானது மாணவர் மையக் கல்வியாகவே காணப்படுகின்றது. பழைய கல்விமுறையில் காணப்பட்ட போதனை முறையானது நீக்கப்பட்டு தேடல்கள் மூலம் மாணவர்கள் அறிவு பூர்வமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதற்கு பெருமளவில் இன்று பாடசாலை நூலகங்களும், பொது நூலகங்களும் பங்காற்றி வருகின்றன.

" வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" இன்று மாணவர்கள் அனைவருக்கும் நூலக பாடம் ஒதுக்கப்பட்டு அனைத்து மாணவர்களும் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. இதைவிட மாணவர்களின் தேடல்களுக்கும் நூலகங்கள் உதவுகின்றது. அறிவைக் கிரகிப்பதற்கும் வாசிப்புத்திறன் மிகச்சிறந்த சாதனமாக உள்ளது.

இந்த வகையில் நூலகங்களின் பணியை ஒருமுகப்படுத்த என நூலகச் சட்டங்களும் செயற்பட ஆரம்பித்து உள்ளன. மண்ணில் பிறந்த ஒவ்வொருவரினதும் பிறப்புரிமை என்ற அடிப்படையில் இவ்வுரிமையை வழங்க என இலங்கை அரசாங்கம் இலவசக் கல்வித் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

இந்த அடிப்படையிலான கல்வி பயிற்சியின் எல்லையையும் கடந்து ஒருவரின் வாழ்நாள் முழுவதையும் பற்றி நிற்கும் அறிவுப் பசியை போக்கவல்லன இந் நூலகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எங்கு ஒருநூலகம் திறக்கப்படுகிறதோ**

**அங்கு நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றது"**

என்பதன் மூலம் நூலகங்களின் முக்கியத்துவம் நன்கு விளங்கும். எனவே மாணவச்செல்வங்களாகிய நாம் அனைவரும் நூல்களைத் தேடி அறிந்து கற்று நல்வாழ்வு வாழ்வோமாக..

**ர.மேருஜா**

**தரம் –11**

**"சிற்பமும் சித்திரமும் சீர் பெருகும் வண்ணம்**

**அற்புதப் படைப்பு ஒன்றே அகிலமே வியந்துநிற்கும்**

**வசந்த வட்டக்கச்சி ஆடிப்பிறப்பு நாளில்**

**நல்லறிவு தந்தருளும் வட்டதீபமே — வாழ்கவே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் தான் பில்கேட்ஸ்

உலகில் மிகப்பெரிய ஒருவர் தான் பில்கேட்ஸ். சர்வதேச புகழ்பெற்ற கம்பியூட்டர் நிறுவனமான மைக்ரோசாப்ட் மென்பொருள் தொழில்நுட்பத்தின் முன்னோடி இவராவர். மிகச்சாதாரணமான நிலையில் இருந்து கடின உழைப்பின் மூலம் புகழின் உச்சிக்கு சென்றவர். இவரின் பெயர் பில்.எச்.கேட்ஸ் அமெரிக்காவில் உள்ள சியாட்டில் நகரில் 1955ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி பிறந்தார். இவரின் தந்தை இரண்டாம் வில்லியம்.தாய் மேரிகேட்ஸ். வாசிங்டன் பல்கலைக்கழகப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். உடன் பிறந்தவர்கள் 2சகோதரிகள்.

குழந்தைப்பருவம் தொடக்கம் கல்வி படித்தபோதும் இவர் சராசரி மாணவராகவே இருந்தார். படிப்பில் அதிக நாட்டம் இல்லாதபோதும் ஆராச்சியில் அதிக ஆர்வம் இருந்தது. அந்த காலகட்டத்தில் கம்பியூட்ரின் பயன்பாடு தொடங்கி இருந்தது.பில்கேட்ஸ்சுக்கு கம்பியூட்ரின் பயன்பாட்டில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. அதனால் அவரது 13ஆவது வயதில் கம்பியூட்டர் மென் பொருளைக் கண்டுபிடித்தார்.

1973 ஆம் ஆண்டு பில்கேட்ஸ் கார்டுபல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு அவருக்கு சகமானவரான ஸடீவ், பால்மர் அறிமுகமும் நட்பும் கிடைத்தது. கார்டுபல்கலைக்கழகத்தில் படித்த போது பில்கேட்ஸ் "பேசிக்" எனப்படும் புதிய கம்பியூட்டர் மென் பொருளைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்கேட்ஸ்க்கு கல்லூரிப்படிப்பை விட கம்பியூட்டர் தொழிநுட்பத்திலேயே அதிக ஆர்வம் இருந்தது.

இதனால் 1975 ஆம் ஆண்டு தனது படிப்பைவிட்டு "மைக்ரோசாப்ட்" என்ற பெயரில் கம்பியூட்டர் மென் பொருளை தயாரிக்கும் நிறுவனத்தை உருவாக்கினார். இந்த புதிய நிறுவனம் தொடங்க அவரது பால்ய நண்பர் பால்மர் பெரிதும் உதவியாக இருந்தார். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மைக்ரோ சாப்ட் நிறுவனம் படிப்படியாக வளர்ந்தது. கம்பியூட்டர் மென் பொருட்கள் தயாரிப்பில் மைக்ரோ சாப்ட் நிறுவனம் கொடிகட்டிப்பறக்க ஆரம்பித்தது. ஆண்டு வருமானம் பல ஆயிரம் கோடி ரூபாய் ஆனது. ஊலகில் 60 நாடுகளில் கிளைகள் உள்ளன. இவற்றில் நாற்பது ஆயிரத்து மேறிபட்டவர்கள் பணிபுரிகின்றனர். பில்கேட்ஸ் 1994.01.01 அன்று மெலிண்டாபிரென்ஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பில்கேட்ஸ்க்கு ஜெனிபர் என்ற மகளும்,ரோரிஜான் என்ற மகனும் உள்ளனர்.

தீவிரமாக புத்தகம் படிக்கும் பழக்கம் கொண்ட இவர் ஓய்வு நேரத்தில் கோல்ப் ஆடுவார். சீட்டு ஆட்டமும் ஆடுவது உண்டு.இவரது நிறுவனம் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதியை கம்பியூட்டர் தொழிநுட்பஆய்வுகள், மருத்துவ ஆய்வுகள், மற்றும் சமூகப்பணிகளுக்கு நன்கொடையாக வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ம. நிரோஜன்

கலைப்பிரிவு (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

கானல் நீரால் கல்விதனில்

வானம் முட்டும் வட்டமதில்

சீருடை அணிந்த சின்னப் பயணம்

வேற்றுமை அளித்த வேடந்தாங்கல்

மதங்கள் இணைந்த மாணவர் கூட்டம்

கீதங்கள் தோறும் அறிவை ஊட்டும்

பள்ளிப் பருவத்திலே.........

அறிவு ஆற்றல் வளர்த்திடு

துணிவு இருக்கு உணர்ந்திடு

கற்றல் அதற்கு துணையாகும்

போதை ஏற்றி மனமதனை தொலைத்தால்

பாதை மாறிப்பயணம் செல்லும்

தாவணி கனவில் கொஞ்சம் தாகம் இருக்கும்

கனவாக்க முயன்றால் வாழ்வும் சறுக்கும்

முயற்சி இருந்தால் முதலாய் வருவாய்

முயன்று கொடுத்தால் நீதான் வெல்வாய்

தடைகள் தாண்டி உலகை ஆள்வாய்

ப.சஜித்திகா

தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள்..

"கேடில் விழுச் செல்வம் கல்வி

ஒருவற்கு மாடல்ல மற்றயவை"

ஆம் ஆளியால் சூழப்பட்ட அகிலத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும்

ஆழிவற்ற சிறந்த செல்வமாக விளங்குவது கல்விச் செல்வமாகும். கல்வி என்னும் கருவூலத்தை எமக்கு வழங்கும் பெருமக்கள் ஆசிரியர்கள் ஆவார்கள். எமது அறியாமை போக்கும் ஆசிரியர்கள் "ஞான விளக்குகள்" என்றார் சோக்கிரட்டீஸ். "நற் சமுதாயத்தை கட்டியெழுப்பும் தூண் போன்றவர்கள்"என்றார் மகாத்மா காந்தி. ஆம் ஆசிரியர் ஒருவர் சமுதாயத்தின் தலைவராகவும் ஏணியாகவும் இருந்து வழிகாட்டுகின்றனர்.

ஒவ்வொருவருடமும் ஐப்பசி மாதம் 06 ஆம் திகதி எமது நாட்டில் ஆசிரியர் தினம் கொண்டாடப் படுகின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற கூற்றிற்கு இணங்க எமக்கு நல்லறிவு புகட்டி எமை வழிநடத்திச் செல்லும் இக் கண்கண்ட தெய்வங்களை போற்றிப் பணிந்து நடத்தல் வேண்டும்.

சங்க காலத்தில் அரசர்களை விட அரசர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கே பெரும் மதிப்புக் காணப்பட்டது. ஆசிரியர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்று நோக்கினால் ஆசு என்றால் குற்றம் என்றும் சிரியர் என்றால் அகற்றும் என்றும் பொருள்படும் ஆசிரியர் குற்றங்களைக் களைபவர் என்று பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமுதாயத்தில் ஆசிரியர் பாட அறிவைக் கொடுப்பவராக மட்டுமன்றி மாணவர்களின் பாதுகாப்பைக் கொடுப்பவராகவும் காணப்படுகின்றார். ஆன்று அரசன் எவ்வழி மக்களும் அவ் வழி என்ற நிலை இருந்தது. இன்று ஆசிரியர் எவ்வழி மாணவர்களும் அவ் வழி என்ற நிலை காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி ஆசிரியர்கள் மாணவர்கள் பற்றிய பொறுப்புடையவர்களாகவும் ,அன்பு செலுத்தும் தாயாகவும், கட்டுப்பாட்டை வளர்க்கும் தந்தையாகவும், செயற்படுகின்றனர். மாணவர்கள் பெற்றோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்பதிலும் பார்க்க ஆசிரியர் கூறும் அறிவுரைகளைக் கேட்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தகைய நவீன கற்பித்தற் சாதனங்கள் வந்தாலும் அவற்றால் ஆசிரியர்கள் வழங்கும் அன்பை பரிவை, அரவணைப்பைத் தரமுடியுமா? ஆட்சியை மாண்புறச் செய்யும் வழி காட்டிகளாகவும் விளங்குகின்றனர்.

**"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**

**வன்மையு ளெல்லாந் தலை"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஆசிரியர்களைப் போற்றிக் கௌரவித்து நடப்போமாக.

**ஜெனித்தா**

**வர்த்தகப் பிரிவு 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காப்புக்கலையின் முடிசூடா மன்னன் புரூஸ்லி

தற்காப்புக் கலையின் முடிசூடா மன்னன் புரூஸ்லி என்றால் மிகையாகாது. ஐக்கிய அமெரிக்காவின் 1940.11.27 ஆம் திகதி பிறந்தார் இவரது பெற்றோர்கள் வேறாஸ், கிரோஸ் புரூஸ்லியின் இயற்பெயர் யூன்வான். இன்றைய இளைஞர்கள் இவரைப் பற்றி அறிவதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் இக்கட்டுரையை இங்கு தருகிறேன்.

அமெரிக்க மருத்துவர்கள் இவரை புரூஸ் என அழைத்தனர்.அவரது குடும்பப் பெயரான லீயும் சேர்ந்து வெரின் பெயர் புரூஸ்லி ஆகிற்று. புரூஸ்லி 3 மாத குழந்தையாக இருந்த போதே திரைப் படத்தில் நடித்திருந்தார். தனது சிறு வயதுக் கல்வியை ஹெங்ஹெங்கில் கற்றார். பாடசாலை மாணவர்களிடையே சவால் என்றால் புரூஸ்லி முக்கிய பங்கு வகிப்பார். ஆனால் கல்வியில் ஆர்வம் குறைவாகவே காணப்பட்டது.

தற்காப்புக்கலை கற்கவேண்டும் என்று 12 வயதில் புரூஸ்லி அடம் பிடித்தார். தாயாருடன் சென்று லிங்சான் ஆசிரியர் யுப்மேன் இன்குங்பூ பள்ளியில் இணைந்தார். இதன் பின்னர் புரூஸ்லி மேற் படிப்புக்காக பிரான்சிஸ்கோ சென்றடைந்தார். இங்கு கற்று பின்னர் நியூயோக் சென்று புரூஸ்லி அங்கு கின்யூன் மார்க்கின் பள்ளியில் இணைந்தார். பின்னர் சைனா டவுனில் உள்ள உணவகத்தில் பகுதிநேர ஊழியராகக் கடமையாற்றினார். மாலைநேரத்தில் வகுப்புக்களை நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தின் உதாசீனப் பேச்சுக்களையும் ஏளனச் சிரிப்புக்களையும் தாண்டி ஒரு சாதனை படைக்க வேண்டும் என்றால் உடல் வலிமை மட்டும் போதாது இரும்பு போன்ற மன வலிமையும் வேண்டும் மனதைத் திடமாக வைத்திருந்த புரூஸ்லி 1959 ஆம் ஆண்டு அமெரிக்கா வந்து இறங்கினான்.

அப்பொழுது புரூஸ்லிக்கு வயது 18 .அடுத்த 14 ஆண்டுகளில் சினிமாவில் வெற்றிக் கொடி நாட்டி அப்பொழுது இருந்த சினிமா நட்சத்திரங்களுக்கு மாற்றாக விளங்கினான். ஆனால் அவரது மரணம் அவரது ஆயுளைக் குறைக்காமல் இருந்திருந்தால்.... புரூஸ்லி 33 ஆவது வயதில் மரணம் அடைந்தார். குண்டர் கும்பலில் வாழ்ந்தாலும் தேர்ந்தெடுத்த துறையில் புரூஸ்லிக்கு இளம் வயதில் வானத்தை வசப்படுத்தியது.

சு.புகழ்நிலா

கலைப்பிரிவு – 2018

**"பிரஞ்சு மன்னனும் அவரின் மனைவியும் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டனர"**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா........?

⇒ உலகில் பழைமையான பாலைவனம் - நமீப்

⇒ 800 வருடங்காக பாலைவனங்களில் காணப்படும் மரம் -

இரும்பு மரம்

⇒ கோபி பாலைவனத்தில் முதன்முதலாக பயணம் செய்தவர் -

மார்க்கோபோலோ

⇒ தன் வாழ்நாளில் ஒரு நாளும் நீர் அருந்தாத பாலூட்டி கங்காரு

⇒ உலகில் அதிகமான உயிரினங்கள் உள்ள பாலைவனம் -
சோனாரான்

⇒ கிரியோசோட் என்ற குற்றுப்புதரின் வாழ்நாள் - 12000வருடங்கள்

⇒ கோடைகாலத்தில் 24 மணிநேரமும் சூரியன் மறையாத

பிரதேசம் - வடதுருவ ஆட்டிக்பிரதேசம்

⇒ எங்கேயும்இல்லாத அளவுக்கு அதிகமான வெளவால்கள் வாழும்

பாலைவனம் - சிவாவான்

⇒ கலஹரியில் வாழும் சிறுத்தை மணிக்கு70 கி.மீ வேகத்தில்
பாயும் -

⇒ உலகில் மிக உயரமான கள்ளியின் பெயர் - சாகுவரே

**கபிலன்**

**கலைப்பிரிவு 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கில் இருந்து பிறந்த அரங்கு

அரங்கு என்பது உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிக்கொணரும் களமாகும். "உணர்வுகளும், எண்ணங்களுயும் பரிகரிக்கும் இடம் அரங்கு" என பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுகின்றார். அரங்கானது அதனில் பங்களிக்கும் ஒவ்வொருவரினதும் உணர்வுகளுக்கு வடிகால் அமைக்கின்றது. இதனைப்பற்றி Vera mawry robetts இவ்வாறு கூறுகின்றார்

"நாமே நம்மை பார்ப்பதற்காய் இயற்கைமேல் வைக்கப்பட்டுள்ள கண்ணாடி அரங்கு" எனவே அரங்கு என்பது உணர்வு பரிமாற்றமும் ஊடாட்டமும் நிகழ்த்தப்படும் களமாக அமைகின்றது. மேடையில் நிகழும் காட்சி மட்டுமல்லாது அதற்கு துணையான அனைத்து அம்சமுமே, காண்பிய இணைவுகளமே அரங்காக வெளிக்கொணரப்படுகின்றது.

சமுதாயம் எனும் கட்டுக் கோப்பில் இயங்குகின்ற ஒரு நிறுவனமே நாடகம். பண்பாடு ஆற்றுகைகளில் ஒரு சமுகம் பங்கு பற்றுதலனது அச் சமூகத்தில் ஒருமைப் பாட்டையும் ஒத்திசைவையும் வளர்க்கும் நிலையினை அரங்கு தக்க வைத்துக் கொள்கிறது.

குறிப்பிட்ட சமுகத்தின் ஒன்றுபட்ட மனிதரின் வெளிப்பாடே அச் சமுகத்தின் சமயம் எனக் கூறும் தர்கைம்மின் கூற்று அரங்கின் இயல்புடன் பொருந்தி நிற்கிறது. எனவே நாடகம் சடங்குகளின் அடியாகவே பிறந்தது என்ற தொம்சனின் கருத்து மெய்யானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கானது நம்பிக்கையின் வலுப்பெற்ற ஐதீகம் ஆகும். இது மக்கள் பண் பாட்டின் வலுப் பெற்ற நம்பிக்கைகளால் மீளவும் மீளவும்

நிகழ்த்தப் படுகின்றது. மீண்டும் மீண்டும் செய்வதால் போலச் செய்தல் ஆகின்றது. நாடகக் கலை கூட்டு முயற்சியில் பிறக்கும் கலையாகும். அனைவரையும் ஒன்றிணைக்கும் கலையாகவும் உள்ளது. எனவே சமூக கூட்டுப் பொதுமையினை நாடகம் ஏற்படுத்துகின்றது. இப்பண்பை சடங்கில் இருந்தே நாடகம் பெற்றுக் கொள்கிறது. ஆரம்ப காலங்களில் சடங்கில் முழுச் சமூகமும் பங்கு கொண்டது. அவர்கள் சடங்கில் ஆடினர், பாடினர் கைப் பொருட்கள் பயன்படுத்தினர். இந்துச் சடங்குகளான சூரன்போர், வேட்டைத் திருவிழா, பாண்டவர் வனவாசம் போன்ற சடங்கில் நாடகத்தின் அம்சங்களைக் காணலாம். கிறிஸ்தவ சடங்கான பாஸ்கு என்பதிலும் சடங்கிலிருந்தே நாடகம் தோன்றியதைக் காண முடிகின்றது. ஆகவே அரங்கின் படைப்பு என்பதும் தோற்றம் என்பதும் நமது பண்பாட்டின் வெளிக் கொள்கையாகவும் நம்பிக்கையின் சின்னமாகவும் சடங்கில் இருந்து தோற்றம் பெற்றுள்ளது என்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

**திருமதி.துவாரதி ஞானச்சந்திரன்**

**ஆசிரியர்,நாடகமும் அரங்கியலும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆம் நூற்றாண்டு மரபுவழிக் கல்வியில் தமிழ் ஆசிரியர்கள்

19 ஆம் நூற்றாண்டு கல்வி மரபில் நிறுவன ரீதியான கல்வி, மரபு ரீதியான கல்வி என இரு மரபுகளைக் காணலாம். இவ்விரு மரபிலும் ஆசிரியரின் நிலையும் வேறுபட்டுக் காணப் பட்டிருப்பதனைக் காணலாம்.ஆசிரியர்களின் ஆளுமை மனநிலை, உடை,மாணவர் உறவு நிலை போன்ற விடயங்களில் வேறுபாடுகள் நிலவின.

மரபுவழித் தமிழ்க் கல்வியே தமிழ் மக்களின் பண்பாட்டை நிலை நிறுத்தியிருந்தன. ஆசிரியர்கள் மிகுந்த நிலையிலேயே மதிக்கப்பட்டனர். எழுத்தறிவித்தவன் இறைவன் என்னும் கருத்து தமிழர்களிடையே காணப்பட்டது. உபாத்தியாயர(வாத்தியார்) ,சட்டம்பியர் என்னும் கௌரவப் பெயர்களால் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர். இன்றும் ஆங்காங்கே இப்பெயர்கள் பயன் படுத்தப்படுவதனை காணலாம். உபாத்தியாயர் சொல்வதை அக் கிராமத்து மக்கள் கேட்டு நடக்கும் ஒரு நிலையிருந்தது அது மட்டுமன்றி சில பிணக்குகளுக்கு நீதி வழங்குபவர்களாகவும் விளங்கியுள்ளனர். அறிவு. நல்லொழுக்கம், நிதானம் முதலியவற்றைமரபுவழித் தமிழ்ஆசிரியர்கள் கொண்டிருந்தமை சமூகச் செல்வாக்கிற்கு காரணம் எனலாம்.

மரபுவழி இலக்கணங்களில் ஆசிரியர்களின் நிலை பற்றிக் குறிப்பிடும் போது நூலாசிரியரைச் சுட்டி நின்றாலும் போதானா ஆசிரியர்களும் இத் தன்மையுடையோராகவே இருந்துள்ளனர். பொதுவாக இலக்கணங்கள் ஆசிரியர் பற்றிக் கூறும் போது அவர்கள் மலை, நிலம், பூ போல இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

அதாவது மலை போல் அறிவும் நிலம் போல் அறிவும், பூ போல பொறுமையும் வாசனையும் இருக்க வேண்டும் என்கிறது. இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை மரபுவழித் தமிழ் ஆசிரியர்களிடம் காணமுடிந்துள்ளது. ஆசிரியர் இலக்கணம் பற்றி நன்னூல் கூறும் போது

**"குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை**

**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**

**நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**

**உலகிய லறிவோ டுயர்குண மனையவும்**

**அமைபவன் நூலுரையா சிரியன்னே"**

மரபுவழித் தமிழ் ஆசிரியர்கள் இவ் வரைவிலக்கணங்களுக்கு இலக்கணமாக இருந்துள்ளனர். கிராமத்தில் பிறந்து நீண்ட காலமாக ஆசிரியராக இருப்பவர்களுக்கு இன்றும் கிராமத்தில் மதிப்பும் மரியாதையும் இருப்பதைக் காணலாம். மரபுவழித் தமிழ் ஆசிரியர்களின் கையளிப்பாகவே இப் பண்பு நிலவுகின்றது. மரபுவழித் தமிழ் ஆசிரியர்கள் போதனையோடு மட்டும் நின்று விடாது கிராமத்தின் முக்கிய விடயங்களில் இவர்களே முதன் நிலையில் இருந்துள்ளனர். இலக்கண, இலக்கிய அறிவோடு வைத்திய , சோதிட அறிவுடையோராகவும் இருந்துள்ளனர். நடமாடும் பஞ்சாங்கமாக இவர்கள் விளங்கியமையால் மரபுவழித் தமிழ் ஆசிரியர்களே அறிவார்ந்த பெரியமனிதராகக் கருதப்பட்டனர். ஆசிரியருக்கு கணக்காயர் என்னும் பெயர் இருந்துள்ளதனை திரிகடுகத்தில் காணலாம். மரபுவழித் தமிழ் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கப்பட்டதாக சான்றுகள் இல்லை. மாணவர்கள் தம் வசதிக்கு ஏற்ப கொடையை வழங்கினர்.பெரும்பாலும் அம்மாவாசை, பூரணை நாட்களில் கொடையை வழங்கினர். பொதுவாக நோக்கினால்மரபுவழிக்

கல்வி பண்டமாற்று முறையாகவே காணப்பட்டது. ஆசிரியர் கொடையை எதிர்பார்க்காதபோதும் மாணவர்கள் தம் கடைமையாக எண்ணினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உற்றுழி உதவியும்உறுபொருள் – கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"**

என்கிறது புறநானூறு. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சில வசதியுள்ள மாணவர்கள் பணமும் கொடுத்துள்ளனர். ஆகக்கூடிய பணமாக கால் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மரபுவழித் தமிழ் ஆசிரியர்களின் வீடுகளில் நடைபெறும் விழாக்களை ஊரில் உள்ளோரே நடத்தியுள்ளனர். அனைவரும் ஒற்றுமையாகப் பங்கு பெறும் இடமாக ஆசிரியர்கள் வீடுகள் இருந்துள்ளது.

மரபுவழித் தமிழ் ஆசிரியர்களை அணுகி பாடம் கேட்பதோடு மட்டுமன்றி பணி விடைகளட செய்தமையையும் காணமுடிகின்றது. ஆசிரியருக்கு பணிந்து அடங்கி நடப்பது முக்கியமானதாகும் இதனை நாவலரின் பால பாடத்தில் 43 பாடம் விளக்குகின்றது. நெருங்கிய தொடர்பு இருந்த போதிலும் தண்டனைகளையும் ஆசிரியர்கள் வழங்கி வந்துள்ளனர். தண்டனைக்கு அஞ்சிப் படிப்பை நிறுத்தியவர்களும் உள்ளனர். மரபுவழித் தமிழ் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்கியுள்ளனர். கல்வியை விட ஒழுக்க சீலராக இருக்க வேண்டும் என்பதல் உறுதியாக இருந்துள்ளனர் என்றே உ.வே சாமிநாத ஐயர் நல்லுரைக் கோவை என்னும் நூலில் கூறுகின்றார். பிரம்பால் அடித்தல், முழந்தாழில் நிறுத்தல், தலையிலே குட்டுதல், முதலிய தண்டனைகளுக்கு மாணவர்கள் அஞ்சினர். ஆசிரியர்களுக்கு மாணவர்கள் அஞ்சி நடுங்கிய . போதும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். இதனை காத்தவராயன்கூத்திலும் காணலாம்

**"பள்ளிக்கூடம் போவதென்றாற்**

**பெற்றவளேதாயே —எனக்கு**

**பயமாகத் தோன்றுதம்மா**

**பெற்றவளேதாயே**

**சட்டம்பி பொல்லாதவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றவளேதாயே —அவன்**

**சற்றுமிரங்கானம்மா**

**பெற்றவளேதாயே.....**

மாணவர்களுள்ளும் முதல்,இடை,கடை என 3 வகையுண்டு. 19ஆம் நூற்றாண்டு மரபுவழித் தமிழ்க் கல்வியில் ஆசிரியர்களும், சிறந்த மாணவர் பரம்மரையும் இருந்துள்ளதைக் காணலாம். இப்பண்பு இன்றும் ஆங்காங்கே காணப்படுகின்றபோதும் நின்று நிலைப்பதனாலேயே தமிழ்ப்பண்பாடு புத்துயிர்பெறும்.

திருமதி.ஜனகா. சிவசுப்பிரமணியம்
ஆசிரியர்(தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களில் கவனம் செலுத்துங்கள்

- புத்தகங்களை அதிகமாக பிரிக்காதீர்கள்
- பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்கள்
- மூலைகளை மடிக்காதீர்கள்
- தலையணையாக வைக்காதீர்கள்
- விசியெறியாக பாவிக்காதீர்கள்
- இன்னொருவர் மீதோ நிலத்திலோ அடிக்காதீர்கள்
- சிறு குழந்தைகளிடம் கொடாதீர்கள்
- குறிப்புக்கள், கோடுகள் இடாதீர்கள்
- அழுக்கான ஈரமான கரங்களோடு தொடாதீர்கள்

ச.கிசாந்தன்

கலைப்பிரிவு/2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

எளிமையின் தோற்றமாம் எங்கள் தமிழ்
எல்லோரையும் கவர்ந்திடும் அழகு தமிழ்
செம்மொழி எனப் பார்போற்ற
திகழ்ந்திடும் எம் தாய் மொழியாம்

உயிரோடு மெய்யும் கலந்து
உணர்வுகளை வெளிக் காட்டும் உன்னத மொழியாம்
இயல்,இசை,நாடகம் எனும் முத்தமிழுக்கும்
முறையானது எங்கள் தாய் மொழியாம்

சங்கத் தமிழாம் -அது
எங்கள் இன்பத் தமிழாம்
தமிழ்திரு நாட்டின் தாயாம் -இது
இன்பத் தாய் மொழியாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளோடு புகழ் கூறும் தாய் மொழியாம்
புலவர் போற்றும் அமுத மொழியாம்
ஓங்கிடும் உன்புகழ் தரணியிலே
வாழ்க தமிழே வளர்க தமிழே.

சி. டயானுகா
தரம்-11

"நேரத்தையும் பணத்தையும் திட்டமிட்டு செலவு செய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் காட்டும் முகாமைத்துச் சிந்தனைகள்

01. ஒரு முகாமையாளர் உயர்ந்த மனிதப்பண்புகளையும் நல்லொழுக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

**எய்துவர் எய்தாப் பழி"**

02.பக்கச் சார்பற்றவராகவும் நடுவுநிலை தவராதவராகவும் இருத்தல் வேண்டும்

**"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர் கணி"**

03.தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தவறு செய்யும் போது தனிமையில் அழைத்து உணர்த்தவேண்டும்

**" கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**

**முன்னின்று பின்னோக்காச் சொல்"**

04.தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் உதவி என்று வரும்போது காலம் அறிந்து உதவுதல்

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**

**நன்மைகடலிற் பெரிது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களிடம் அளவறிந்து பேசுபவராகவும் தேவையற்ற வார்த்தைகளைப் பேசாதவராகவும் இருத்தல்

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

06.முகாமையாளர் தான்கூடிய சபையில் தேவையற்ற வார்த்தைகளைக் கதைத்து பிரச்சினைகளை வளக்காதவர்களாக இருத்தல்

பல்லார் முனியப் பயனிலை சொல்லுவான்

எல்லோரும் எல்லாரும் எள்ளப்படும்"

07. தனது நிறுவனத்தில் குறிக்கோள்கள் நிறைவேற்றும் வகையில் தான் துரிதமாகச் செயற்படுபவராகவும் துணிவானவராகவும் இருத்தல் வேண்டும்

"தூங்காமை கல்வி துணிவுடைமை அம்மூன்றும்

நீங்க நிலம் அன்பர்க்கு"

09. தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மீது கோபம் கொள்ளாதவராக இருத்தல்

"மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய

பிறத்தல் அதனால் வரும்"

*Vithursika*

*Arts/2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்
(படித்தில் பிடித்தது–தேசியவிநாயகம் பிள்ளை பாடல்)

சிந்திய கண்ணீர் துடைப்பவர் யார்?-பயம்
சிந்தை யகன்றிடச் செய்பவர் யார்?
முந்து கவலை யகன்றிடவே-ஒரு
முத்தம் அள்ளித் தருபவர் யார்?

அல்லும் பகலும் உழைப்பவர் யார்?
அன்பு ததும்பி ஒழுகுபவர் யார்?
கல்லும் கனியக் கசிந்துருகி –தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவர் யார்?

அன்பினுக்காகவே வாழ்பவர் யார்?
ஆவியும் போகத் துணிபவர் யார்?
இன்ப உரைகள் தருபவர் யார்?
இன்னகையால் ஒளி செய்பவர் யார்?

ஆவி பிரியும் அவ்வேளையில் - பக்கத்து
அன்போடகலாது இருப்பவர் யார்?
பாவியமனும் வந்திடாமல் -ஈசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம் நினைந்திடச் செய்பவர் யார்?
நீதி நெறி நில்லா வம்பருமே —நல்ல
நேர் வழி நடந்திடச் செய்பவர் யார்?
ஓதிய மானம் இழந்தவரை —உயர்
உத்தமர் ஆக்க முயல்பவர் யார்?

செ.கபிர்சனா
கலைப்பிரிவு 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்கள்

என் கற்பனையில் பிறந்த
சின்னக் குழந்தை இது
இது போல் பலரது கற்பனையும்
நிஜங்களாக சங்கமிக்க வைத்து

வாழ்க்கைக்கு வழி காட்டுவன நூல்கள் மட்டுமே
வாழ்க்கையே ஒரு மாயம் -இதில்
வெற்றியும் தோல்வியும் சகஜம்
மாயஉலகில் வாழ்க்கைக் கடலைக் கடக்க
உதவும் மாயமற்ற தோணியே நூல்கள்

மண் வளமற்றுப் போனால்
மரம் எப்படி வள்ரும்
கண் பார்வையற்றுப் போனால்

காட்சி எப்படித் தோன்றும் - அதுபோல்
நூல்கள் இன்றி இருந்தால்
வாழ்க்கை எப்படி இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்திர வாழ்க்கையானது
கடுகதியாக நகர்கையில்
மாற்றங்கள் பல இவ்வுலகினில்
ஏற்படும் போது

சவால்களை எதிர் கொள்ள துணை நிற்பவை
நல்ல நூல்களே
ஹிட்லர் நெப்போலியன்,
காந்தி, அப்துல்கலாம், பில்கேட்ஸ்
இவர்களை உலகிற்கு தந்தது

நல்ல நூல்களே
உலகில் எது மாறினாலும்
மாறாதது மாற்றம் தான் என்னும்
கொள்கையை மாற்றியது நூல்களே
உலகில் மாறாதது நல்ல நூல்களே
எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
வாழ்க்கைக்கு வழிகாட்டி நல்ல நூல்களே

**செ. டானியல்**

**வர்த்தகப் பிரிவு 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு சில...

உண்மையை விலை கொடுத்து வாங்குங்கள்-ஆனால்
ஒரு போதும் விற்றுவிடாதீர்கள்

தியாகிகளின் இரத்தத்தை விட
அறிஞரின் எழுதுகோல் வலிமையானது

அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள்
சொல்பவரை விட நீங்கள் பயன்படக்கூடும்

மனம் விட்டுப் பேசுங்கள்
மனதில் பட்டதெல்லாம் பேசாதீர்கள்

வாயில் இருந்து புறப்பட்ட வார்த்தை
கோடி கொடுத்தாலும் திரும்பப் பெற முடியாது

தேனுசன்

தரம் II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2015 ஆம் ஆண்டு எம் பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்த**

**இச் சாதனையாளர்களை உயர்தர தமிழ் மன்றம்**

**பாடசாலை சார்பில் மனமார வாழ்த்துகின்றது**

## க.பொ.த சாதாரணதரம்

ஜெ.கஜானி

## க.பொ.த உயர்தரம்

த.பார்த்தீபன் – கணிதப் பிரிவு

து.நிதர்சனா– விஞ்ஞானப் பிரிவு

க.பரணிகா – கலைப் பிரிவு

செ.ரேதுசா – வர்த்தகப் பிரிவு

இவர்கள் மென்மேலும் பற்பல பட்டங்கள் பெற்று பார்போற்ற

வாழ வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

கிளி/வட்டக்கச்சி மத்திய

கல்லூரியின்

வட்டதீபம்

சஞ்சிகை சிறப்புற உதவிய

அன்புள்ளங்கள் மலருக்கு

மெருகூட்டிய நல்லிதயங்கள்

நேயமிகு வாசகர்கள்

அனைவருக்கும்

நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
ஞானஒளி மிளிரும் கல்வி
சாலை வளம் பெறவே என்றும்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்

கட்டுக்கட்டாய் நெல்மணிகள் வெட்டி கட்டி வைத்திடும்
வட்டக்கச்சி மாநிலத்தின் உயர் கல்லூரி
கடசன் வீதி காட்சி தரும் [illegible] கல்லூரி
பட்சமுடன் பல கலைகள் [illegible]ரும் ஆலயம்
(வாழ்த்துவோம் )

தெள்ளு தமிழ் வளர்த்துப் [illegible]ரிபல புரியவும்
உள்ளமதில் அள்ளும் கலை[illegible]டு பல புரியவும்
அள்ளி அள்ளி அறிவுரைகள் அளிக்கும் கலைக் கூடம்
வள்ளுவர் குறளைப் போல வாழ்க நீடு வாழ்கவே

(வாழ்த்துவோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org